S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் ஜனவரி 27 * 2026 * மலர் -1 * இதழ்-238* VOL-1 * ISSUE-238 விலை ரூ.3 * பக்கம் -4

## சென்னை கடற்கரையில் குடியரசு தின விழா:

# முதல்வர் ஸ்டாலின் பதக்கங்கள் வழங்கினார்!

**★ முப்படை வீரர்கள் – அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு; ★ மாணவ – மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள்!!**







சென்னை, ஜன.27–

சென்னை கடற்கரையில் குடியரசு தின விழா நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதில் ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்துகொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் விருதுகளையும், பதக்கங்களையும் வழங்கினார். விழாவில் முப்படை வீரர்கள் மற்றும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெற்றது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

தமிழக அரசின் சார்பில் சென்னை மெரினா கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள காமராஜர் சாலையில் குடியரசு தின விழா இன்று மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் கலந்துகொள்வதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விழா மேடைக்கு வருகை தந்தார். பின்னர் அங்கு திரண்டிருந்த பொதுமக்களுக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

விழாவுக்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் அணிவகுப்பு மேடைக்கு அருகில் வந்து வரவேற்றார். அதனைத் தொடர்ந்து ஆளுநர் ஆர்.என் ரவி வருகை தந்தார். அவரும் மக்களுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். இதற்கிடையே ஆளுநரை வரவேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அவருக்கு தென்னிந்திய பகுதிகளின் ராணுவத் தலைமையக தலைமைப் பணியாளர் அதிகாரி மேஜர் ஜெனரல் ஆர்.எம். ஸ்ரீநிவாஸ், கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் சதீஷ்

எம்.ஷெனாய், விமானப்படை அதிகாரி ஏர் கமோடர் தபன் சர்மா ஆகிய முப்படை அதிகாரிகளை அறிமுகம் செய்து வைத்தார். மேலும் கடலோரக் காவல் படை டி.ஐ.ஜி. பாலகிருஷ்ணன் முருகன், தமிழக காவல் துறைத் தலைவர் ஜி. வெங்கடராமன் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளும் ஆளுநருக்கு அறிமுகம் செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து ஆளுநர் ஆர்.என். ரவி தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். உடனே தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அப்போது இந்திய விமானப் படை ஹெலிகாப்டர் மூலம் வானில் இருந்து மலர்கள் தூவப்பட்டன.

அதன் பின்னர் ஆளுநர் ஆர்.என். ரவி முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அதைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு விருதுகளையும், பதக்கங்களையும் வழங்கி கவுரவித்தார்.

வீரத்தீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த தீயணைப்பு துறை ஓட்டுநர் வி.சங்கர், தீயணைப்பு துறையைச் சேர்ந்த பா.சுரேஷ் மற்றும் செ.ரமேஷ் குமார் ஆகியோருக்கும், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மறைந்த பீட்டர் ஜான்சனுக்கும் வழங்கப்பட்டன.

மத நல்லிணக்கத்திற்காக வழங்கப்படும் கோட்டை அமீர் விருது, திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கலிமுல்லாவுக்கும், விவசாயத் துறையில் அதிக நெல் உற்பத்தி செய்தமைக்கான சி.நாராயணசாமி நாயுடு சிறப்பு விருது, தஞ்சாவூரைச் சேர்ந்த க.வீரமணிக்கும் வழங்கப்பட்டது.

காவல் துறையில் சிறப்பாகப் பணியாற்றியமைக்கான காந்தியடிகள் காவலர் பதக்கங்களை விழுப்புரம் மண்டல மத்திய நுண்ணறிவுப் பிரிவு காவல் ஆய்வாளர் பி.நடராஜன், விழுப்புரம் மாவட்டம் ஆரோவில் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மா.சத்யாநந்தன், கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் நிலைய உதவி ஆய்வாளர் சு.மணிகண்டன், கடலூர் மாவட்டம் புத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் க.நடராஜன், சேலம் மாவட்டம் மத்திய நுண்ணறிவுப் பிரிவு தலைமைக் காவலர் கண்ணன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். மேலும், சிறந்த காவல் நிலையங்களுக்கான முதலமைச்சரின் விருதுகளில் மதுரை மாநகரம் முதலிடத்தையும், திருப்பூர் மாநகரம் இரண்டாம் இடத்தையும், கோயம்புத்தூர் மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. விருது வழங்கும் நிகழ்வைத் தொடர்ந்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும், தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையத்தின் பாரம்பரிய நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தமிழக அரசின் பல்வேறு துறைகளின் சாதனைகளை விளக்கும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடந்தது. இது பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

விழாவின் முக்கிய நிகழ்வான கம்பீரமான அணிவகுப்பு நடைபெற்றது. விங் கமாண்டர் பரம்ஜீத் சிங் அரோரா தலைமையில் நடைபெற்ற இந்த அணிவகுப்பில், ப்லைட் லெப்டினன்ட் தமிழ்வாணி துணைத் தளபதியாகச் செயல்பட்டார். இதில் ராணுவப் படைப்பிரிவு, கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல் படையின் பிரிவுகள் அணிவகுத்து வந்தன. மேலும் சி.ஐ.எஸ். எப், முன்னாள் ராணுவத்தினர் படைப்பிரிவு, தமிழகப் பேரிடர் மீட்புப் படை, கர்நாடக மாநில சிறப்பு காவல் படை மற்றும் தமிழக கமாண்டோ படை ஆகியவை வரிசையாக அணிவகுத்துச் சென்றன.

# சென்னையில் குடியரசு தின விழா கொண்டாட்டம்



பெண் போலீசார் அணிவகுத்து வந்தகாட்சி.



மாணவிகள் தப்பாட்டம் ஆடிய காட்சி.



சென்னையில் நடந்த குடியரசு தின விழாவில் முதல்வர் ஸ்டாலின் வீரதீர செயல்கள் புரிந்த போலீசாருக்கு பரிசு வழங்கியபோது எடுத்தபடம்.



மாணவிகள் பரத நாட்டியம் ஆடி வந்த காட்சி.



ராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை படத்தில் காணலாம்.



குடியரசு தின விழாவில் துப்பாக்கியுடன் போலீசார் அணிவகுத்த காட்சி.



பள்ளி மாணவிகள் அணிவகுப்பு மரியாதை செலுத்திய காட்சி.



நவீன பீரங்கி அலங்கார ஊர்தி வந்த காட்சி.



மாணவிகள் பரத நாட்டியம் ஆடி வந்த காட்சி.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் "என் ஊர், என் கனவு" திட்டம் தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ், உதவி ஆட்சியர் (பயிற்சி) ரா.வெங்கடேஷ்வரன் உட்பட பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம் பந்தலூர் வட்டம் சேரம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியின் ஆண்டு விழாமிகசிறப்பாகநடைபெற்றது.இதில்பள்ளியின்மாணவமாணவிகளின்கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. முடிவில் நிகழ்ச்சியில் பங்குபெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.



# சேலம் ஏ.வி.ஆர். திருமண மண்டபத்தில் கம்பன் விழா!

சேலம், ஜன.27

சேலம் மாவட்டம் முள்வாடி கேட் பகுதியில் உள்ள ஏவிஆர் திருமண மண்டபத்தில், கம்பன் விழா சிறப்பாக தொடங்கியது. இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், விழாவின் முதல் நாளான நேற்று, மங்கள வாத்தியங்கள் முழங்க, அன்னை நாட்டியாலயா மாணவிகள் பங்கு பெற்ற பரதநாட்டிய நிகழ்ச்சியுடன் கம்பன் விழா தொடங்கியது. பின்னர் நிகழ்ச்சியில், ஏவீஆர் சுகந்தி சுதர்சனம் குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியை முறைப்படி தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ள வந்திருந்த அனைவரையும் சேலம் கம்பன் கழக செயலாளர் சுசீந்திரகுமார் வரவேற்றார். இந்த விழாவில் பேருரை ஆற்றுவதற்காக, சிந்தனை செம்மல் பழ. கருப்பையா விழா பேருரை ஆற்றினார். பின்னர் விழாவிற்கு வந்திருந்த சேலம் ஈஸ்ட் வெஸ்ட் குரூப் உரிமையாளர் மோகன் குமார், ராமானந்த மகராஜ், சேலம் கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோவில் அறங்காவல் குழு தலைவரும், கம்பன் கழக செயற்குழு உறுப்பினருமான எஸ். டி. என். சக்திவேல், செல்வி சக்திவேல், கம்பன் கழகப் பொருளாளர் சந்திரசேகர், முனைவர் பாரதி கிருஷ்ணகுமார், கம்பன் கழக செயலாளர் ராமன், ரஞ்சனி சந்திரசேகர், ஆகியோருக்கு கம்பன் கழக தலைவர் ஏபி. சுதர்சனம் ஏவீஆர் அவர்கள் பொன்னாடை அணிவித்து அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றார். நிகழ்ச்சியில் பேசிய சிந்தனை செம்மல் பழ. கருப்பையா, கம்பர் குறித்து பல்வேறு நிகழ்வுகளை நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி; சாலை விதிகளை பின்பற்றி விபத்துக்களை தடுக்க வலியுறுத்தல்!

பாலக்கோடு,ஜன.27

தர்மபுரி மாவட்டம், பாலக்கோட்டில் போக்குவரத்துறை சார்பில் தேசிய சாலை பாதுகாப்பு மாதம் 01/01/26 முதல் 31/01/26 வரை கடைபிடிக்கப்படுவதை முன்னிட்டு வாகன ஓட்டுனர்களுக்கு சாலைபாதுகாப்புவிழிப்புணர்வுநிகழ்ச்சி மோட்டார் வாகன ஆய்வாளர் ராஜேஷ்கண்ணா தலைமையில் நடந்தது.

இதில் சாலை விதிமுறைகளை பின்பற்றுவதின் அவசியம் குறித்தும், மொபைல் போனில் பேசியபடி வாகனத்தை ஓட்டுவதால் ஏற்படும் விபத்துக்கள், உயிரிழப்புக்கள் குறித்தும், விபத்துக்களை தடுக்க சாலை விதிகளை முறையாக கடைபிடிக்க வேண்டும், ஆட்டோக்களில் அதிகபடியான பயணிகளை ஏற்றி செல்ல கூடாது, சீட் பெல்ட், தலைகவசம் அணிவதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும் செல்போன் பேசியபடி வாகனங்கள இயக்கினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், 18 வயதிற்க்கு குறைவான பள்ளி கல்லூரி மாணவர்கள் இருசக்கர வாகனங்களை இயக்கினால் 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிப்பதுடன், பெற்றோர்களும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என எச்சரித்தார். அதனைத் தொடர்ந்து சாலை விதிகளை பின்பற்றுவேன், விபத்தில் லா தமிழகத்தை உருவாக்குவேன் என உறுதிமொழி எடுத்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கண்காணிப்பாளர் திரு விஜயகுமார் ஓட்டுனர் பயிற்சிபள்ளி உரிமையாளர்கள், வாகன பதிவு முகவர்கள் , ஓட்டுநர்கள், பழகுநர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் .

## போச்சம்பள்ளி அருகே பரபரப்பு:

# 2 டன் ரேஷன் அரிசி பறிமுதல்; தப்பியோடிய கடத்தல்காரர்களுக்கு வலைவீச்சு!



கிருஷ்ணகிரி, ஜன.27

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரேஷன் அரிசி கடத்தலைத் தடுக்க மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் மற்றும் அதிகாரிகள் தீவிர கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதில் போச்சம்பள்ளி பகுதியில் ரேஷன் அரிசி கடத்தவதாக மாவட்ட நிர்வாகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் மாவட்ட வழங்கல் அலுவலர் கீதாராணி அறிவுறுத்தலின்படி, போச்சம்பள்ளி வட்ட வழங்கல் அலுவலர் ரகமத்துல்லா, தனி வருவாய் ஆய்வாளர் பாலசுப்பிரமணியம், வட்ட பொறியாளர் தனசேகரன் குழுவினர் போச்சம்பள்ளி சுற்றுவட்டாரப் பகுதிகளில் ரகசிய சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, பாளேத்தோட்டம் சிப்காட் சாலையில் சந்தேகத்திற்கு இடமான வகையில் டாடா சுமோ கார் ஒன்று நீண்ட நேரமாக ஸ்டார்ட் செய்யப்பட்ட நிலையிலேயே நின்று கொண்டிருந்தது.

அதிகாரிகள் அந்த காரை அணுகிய போது, அதிலிருந்த நபர்கள் அதிகாரிகளைக் கண்டதும் காரை அப்படியே விட்டுவிட்டுத் தப்பியோடினர். பின்னர் காரைச் சோதனையிட்டபோது, அதில் மூட்டை மூட்டையாக சுமார் 2 டன் ரேஷன் அரிசி கடத்தி வரப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட அரிசி மற்றும் கார் ஆகியவற்றை அதிகாரிகள் மீட்டு, போச்சம்பள்ளியில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கில் ஒப்படைத்தனர்.

தப்பியோடிய மர்ம நபர்கள் குறித்து போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து, காரின் உரிமையாளர் மற்றும் கடத்தலில் ஈடுபட்ட நபர்களைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

# வேடம்பட்டி கிராமத்தில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு த.வெ.க.வினர் உதவி!

பாலக்கோடு,ஜன.27

தர்மபுரிமாவட்டம், பாலக்கோடு அடுத்த கும்மனூர் பஞ்சாயத்திற்க்குட்பட்ட வேடம்பட்டி கூட்ரோடு பகுதியில் வசித்து வருபவர் இருளர் இனத்தை சேர்ந்த கூலி தொழிலாளிசரவணன், இவரது மனைவி ஜெயம்மா, இவர்களுக்கு 3 பிள்ளைகளும் , 1 ஆண் குழந்தையும் உள்ளனர். இவர்கள் குடிசை வீட்டில் வசித்து வருகின்றனர். நேற்று இவரது குடிசை வீடு திடிரென தீ பற்றி எரிந்து சாம்பலானது. இதில் உணவு பண்டங்கள், தட்டு முட்டு சாமான்கள், வங்கி கணக்கு புத்தகம், குடும்பஅட்டை, ஆதார்அட்டை உள்ளிட்ட அனைத்தும் எரிந்து தீக்கிரையானது.

இதனையறிந்த தமிழக வெற்றி கழக பாலக்கோடு கிழக்கு ஒன்றிய செயலாளர்,

தொகுதி ஒருங்கிணைப்பாளர் குமார் தலைமையில் த வெகவினர், பாதிக்கப்பட்ட சரவணன் குடும்பத்தினருக்கு உணவு பொருட்கள், தட்டுமுட்டு சாமான்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை மற்றும் பாட புத்தகங்களை நேரில் சென்று வழங்கி ஆறுதல் கூறினர்.

இந்நிகழ்வில் பாலக்கோடு மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன், வடகிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வி, ஒன்றிய இணை செயலாளர் ஐயப்பன், துணை செயலாளர் சண்முகம், துணை செயலாளர் முத்துமணி, வடகிழக்கு ஒன்றிய செயலாளர் சரண், காரிமங்களம் மேற்கு ஒன்றிய செயலாளர்வினோத்குமார், மாரண்டஅள்ளி நகர செயலாளர், யுவராஜ்,

நகர பொறுப்பாளர்கள் மீனா, சங்கீதா, நந்தினி, வடமேற்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர்கள் தாமோதரன், முனிசூடப்பன், சக்திவேல், சாக்கப்பன், முரளி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# குற்றாலத்தில் குரங்குகள் குறித்த ஆய்வு தொடக்கம்; மாவட்ட வனத்துறை , ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி இணைந்து செயல்பாடு!

தென்காசி ஜன.27

தென்காசி மாவட்டம் குற்றாலம் பகுதியில் செயல்பட்டு வரும் ஸ்ரீ பராசக்திமகளிர் கல்லூரி மாணவிகள்தென்காசி மாவட்ட வனத்துறையுடன்

குற்றாலம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வாழும் குரங்குகளை அறிவியல்அடிப்படையில் ஆய்வு செய்ய, தென்காசி வனத்துறை மற்றும் பராசக்தி கல்லூரி (விலங்கியல் துறை) இணைந்து சிறப்பு ஆய்வு திட்டத்தை தொடங்கியுள்ளது. இந்த ஆய்வில் பராசக்தி கல்லூரியின் விலங்கியல் துறை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் நேரடியாக களப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். குரங்குகளின் கூட்டங்கள் (Troops), குடும்ப அமைப்பு, நடத்தை, உணவு பழக்கம், உயிரியல் தன்மைகள் மற்றும் உடல்நல நிலை ஆகியவை விரிவாக பதிவு செய்யப்பட உள்ளன. இந்த ஆய்வு குற்றாலம் பகுதிகளிலும், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்கு வெளியேயுள்ள அருகிலுள்ள பகுதிகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். குற்றாலம் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்களை வரவேற்கும் முக்கிய சுற்றுலா தலமாகும். சமீப காலங்களில் குரங்குகள் தொடர்பான மனித விலங்கு மோதல்கள், உணவு பறித்தல் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் நுழைவு போன்ற பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன.





இதனை நிரந்தரமாகவும் மனிதநேயமாகவும் தீர்க்க அறிவியல் ஆய்வு அவசியமாகும். இந்த ஆய்வின் மூலம் கிடைக்கும் தரவுகள், குரங்குகளின் எண்ணிக்கை, வாழிடம் பயன்பாடு, உடல்நலம் மற்றும் நடத்தை குறித்த துல்லியமான தகவல்களை வழங்கும். இத்தகவல்கள் அடிப்படையில், மக்கள் விழிப்புணர்வு, கழிவு மேலாண்மை, உணவு வழங்கல் கட்டுப்பாடு மற்றும் மோதல் குறைப்பு நடவடிக்கைகளை வனத்துறை சிறப்பாக திட்டமிட முடியும். மாணவர்கள் இந்த ஆய்வில் பங்கேற்பது, இளம் தலைமுறையினரிடையே வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் அறிவியல் அணுகுமுறையை வளர்க்கும் ஒரு முக்கிய முயற்சியாகும். குற்றாலத்தின் சுற்றுச்சூழல் சமநிலையை பாதுகாக்கவும், பொதுமக்கள் மற்றும் வனவிலங்குகள் இருவரின் பாதுகாப்பையும் உறுதி செய்யவும், இந்த ஆய்வு முக்கிய பங்களிக்கும் என மாவட்ட வன அலுவலர் முனைவர் ரா. ராஜ்மோகன். தெரிவித்துள்ளார் .



போச்சம்பள்ளி (வ) அகரம் கிராமத்தில் அகரம் கிளை நூலகம் வாசகர் வட்ட கூட்டம் வாசகர் வட்ட தலைவர் நா.சதீஷ் குமார் தலைமையில் கிளை நூலகர் மா.ஜீவரத்னம் முன்னிலையில் நடைபெற்றது. இதில் பழ. வெங்கடாசலம், ராஜேந்திரன், ஓய்வு பெற்ற ஆசிரியர் பெரியண்ணன் , புருஷோத்மன், நாகராஜன், சுஜாதா, கோகிலா மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் தாம் கற்றறிந்த கருத்துக்களை மனப்பூர்வமாக விவாதித்தனர். கலந்துகொண்ட அனைவரும் புத்துணர்வு பெற்றனர்.








# வி.சி.க. சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம்!

கிருஷ்ணகிரி, ஜன.27

கிருஷ்ணகிரியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தி திணிப்பை எதிர்த்து போராடி உயிரிழந்தவர்களை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ம் தேதி மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் அனுசரிக்கப்படுகிறது. அந்தவகையில் கிருஷ்ணகிரி ஐந்து ரோடு ரவுண்டானா பகுதியில் மத்திய மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மாவட்ட செயலாளர் தமிழ் மணி தலைமையில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மண்டல துணைச் செயலாளர் தங்க தியாகு முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக முன்னாள் மாவட்ட செயலாளர் கனியமுதன் கலந்து கொண்டு மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கத்தை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் சசிகுமார், பொருளாளர் ரகு, மாநிலத் துணைச் செயலாளர் பாலன், நகர துணைச் செயலாளர் கணபதி, நிர்வாகிகள் மணி ஜெகநாதன், சரவணன், பிரதாப், சாமுவேல், ராஜேந்திரசோழன், லட்சுமணன், ஆட்டோ குமார், வேலு கண்ணதாஸ், ரஜினி, சுரேஷ், அருண், சரவணன், சுரேஷ்குமார், கோவிந்தராஜ், அன்பு, மாதேஷ், பிரதீப், இனியவன், காளிதாஸ், ராஜதுரை, பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் பறிமுதல்! வியாபாரி கைது!!

புளியம்பட்டி,ஜன.27

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி அருகே உள்ள, பவானிசாகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட எரங்காட்டூர், சாஸ்த்திரி நகர் பகுதியில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்ததாக ஒருவரை போலீசார் கைது செய்தனர்.

சம்பந்தப்பட்ட பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில், தாஹிராபானு (36) என்பவர் தனது கடையில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை விற்பனைசெய்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரிடமிருந்து 6.105 கிலோ எடையுள்ள, ரூ.4,080 மதிப்புள்ள தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதுகுறித்து பவானிசாகர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, குற்றவாளி கைது செய்து பின்னர் ஜாமினில் விடுத்தனர்.

# ஈரோட்டில் கஞ்சா விற்ற 3 பேர் கைது!

ஈரோடு, ஜன. 27

ஈரோடு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் தொடர் கஞ்சா விற்பனை ஈடுபட்ட 3 பேரை போலீசார் கைது செய்து அவர்களிடம் இருந்து 2.400கிலோ கஞ்சாவில் பறிமுதல் செய்தனர். ஈரோடு மட்டும் அதன் சுற்றுவட்டார பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெற்று வருவதாக மாவட்ட போலீஸ் சூப்பிரண்ட் சுஜாதாவுக்கு தொடர் புகார்கள் வந்தது. இதனை தொடர்ந்து கஞ்சா விற்பனையை நிறுத்தும் பொருட்டு போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து ஈரோடு நகர போலீஸ் ஸ்டேஷன், கருங்கல்பாளையம், அரசு மருத்துவமனை ஆகிய போலீஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனை ஈடுபட்ட மணல் மேடு பகுதியைச் சேர்ந்த ராமு (31), ரகுபதி நாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த பிரதாப்( 23), சாஸ்திரி நகர சேர்ந்த ஜொள்ளு என்ற வைரவேல் (23), ஆகிய மூன்று பேரைகைதுசெய்துபோலீசார்அவர்கள்விற்பனைக்காக வைத்திருந்த 2.400 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர் பின்னர் அவர் கோர்ட்டில்ஆஜர் படுத்தினர்.

# கிரேன் மோதி தொழிலாளர் பலி!

ஈரோடு,ஜன.27

பெருந்துறை அடுத்த விஜயமங்கலம் மேட்டுப்புதூர், சேரன் நகர் பகுதியைச் சேர்ந்தவர் சந்திரசேகர் அந்த பகுதியில் உள்ள ஒரு குறிப்பிட்ட தறிப்பட்டறையில்

பணிபுரிந்து வந்தார். இவர் நேற்று இரவு வேலை முடிந்து வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தார் . கிரே நகர் ரோடு பகுதியில் வந்த போது இவருக்கு பின்னால் வந்த கிரேன் மோதி படுகாயம் அடைந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு பெருந்துறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு டாக்டர்கள் பரிசோதனை செய்து சந்திரசேகர் ஏற்கனவே வரும் வழியில் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இது தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து கிரேன் டிரைவர் மணி சிங் சௌகான் என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



# எடப்பாடி பழனிசாமி முதல்வராவதை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது!

## சேலத்தில் இளங்கோவன் பேச்சு!!

சேலம், ஜன.27

அதிமுக நிறுவனரும், தமிழகத்தின் முன்னாள் முதல்வருமான, புரட்சித் தலைவர் எம்ஜிஆரின் நூற்றி ஒன்பதாவது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதியில், சேலம் புறநகர் மாவட்ட அதிமுக சார்பில், பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் சேலம் புறநகர் மாவட்ட அதிமுக செயலாளரும், தமிழ் நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் முன்னாள் தலைவருமான, சேலம் இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தலைமை உரை ஆற்றிய இளங்கோவன், தமிழகத்தில் கடந்த ஐந்து வருடமாக ஆட்சி செய்த திமுக, மக்களுக்காக எந்தவித நலத்திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. மேலும் கடந்த ஐந்து வருடங்களில் தமிழக மக்கள் முன்னேற்றம் அடைந்ததை விட திமுகவினர் அடைந்த முன்னேற்றங்கள் தான் அதிகம் என்றும், இந்த ஐந்து ஆண்டுகளில் எங்கு பார்த்தாலும் கஞ்சா, போதைப்பொருள் நடமாட்டம், சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பாலியல் வன்முறை, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக படுகொலைகள், உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் தான் திமுக அரசு முன்னோடியாக உள்ளதே தவிர, மக்களின் நலமே சிறிதும் அக்கறையின்றி அவர்களின் குடும்ப நலனில் தான் முதல்வர் ஸ்டாலின் அக்கறை செலுத்தி உள்ளார் என்றும், எடப்பாடி பழனிசாமி முதல்வராக இருந்த அந்த நான்கரை வருடங்களில் பொற்கால ஆட்சியை தமிழகத்திற்கு தந்துள்ளார். யாரும் எவரும் செய்ய முடியாத பல வியக்கத்தக்க அரிய சாதனைகளை தனது ஆட்சி காலத்தில் எடப்பாடி பழனிசாமி செய்துள்ளார். ஒரே ஆண்டில் 11மருத்துவக் கல்லூரி, ஆசியாவிலேயே மிகப்பெரிய கால்நடை பூங்கா சேலம் தலைவாசல் பகுதியில் அமைத்தது, டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக சட்டம் இயற்றியது, அத்திக்கடவு அவிநாசி திட்டத்தை நிறைவேற்றியது, மேட்டூர் அணை நிரம்பும் போதெல்லாம் வீணாக கடலில் கலக்கும் உபரி நீரை, மேட்டூர் சுற்றியுள்ள 100 ஏரிகளுக்கு நிரப்பும் மகத்தான திட்டம் கொண்டு வந்தது, சட்டம் ஒழுங்கை சிறப்பான முறையில் கையாண்டது, என்பது உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை எடப்பாடி பழனிசாமி செய்துள்ளார். எனவே வருகின்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில், அருதி பெரும்பான்மையோடு அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி அமைத்து முதலமைச்சர் ஆக எடப்பாடி பழனிச்சாமி பதவி ஏற்பார். அதற்கான கால சூழல் தற்போது தமிழகத்தில் நிலவி வருவதாகவும், எடப்பாடி பழனிசாமி முதல்வர் ஆவதை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது, எப்போது தேர்தல் வரும் இரட்டை இலைக்கு வாக்களிக்கலாம் என மக்கள் காத்துக் கொண்டிருப்பதாகவும், திராவிட மாடல் என்ற பெயரில் தினம் ஒரு சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை ஏற்படுத்தி, ஒழுங்கற்ற இந்த திமுக ஆட்சியை மக்கள் விரட்டியடிக்க தயாராகி விட்டனர். அதற்கான பிரச்சாரம் தான் எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்ட 5 தேர்தல் அறிவிப்புகளுக்கான வரவேற்பு என்றும், இதற்கு மக்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பு உள்ளதாக தெரிவித்த இளங்கோவன், எடப்பாடி பழனிச்சாமி நிச்சயம் முதலமைச்சராக வெற்றி பெற்று தமிழகத்தில் மிகச் சிறப்பான மாநிலமாக கொண்டு வருவார் என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் சித்ரா, ஜெயசங்கரன் மற்றும் சேலம் புறநகர் மாவட்ட அதிமுகவை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர், எம்ஜிஆர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க. பிரமுகருக்கு சரமாரி அரிவாள் வெட்டு!

மேட்டுப்பாளையம்,ஜன.27–

மேட்டுப்பாளையம் அருகே அ.தி.மு.க. பிரமுகரை சரமாரியாக அரிவாளால் வெட்டிவிட்டு காரில் தப்பி சென்ற 4 பேர் கும்பலை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.



நீலகிரி மாவட்டம் கோத்தகிரி தேனாடு பகுதியை சேர்ந்தவர் சிவக்குமார்(45). இவர் சொந்தமாக தேயிலை தோட்டம் வைத்து நடத்தி வருகிறார்.இவர் அண்மையில் அ.தி.மு.க.வில் இணைந்தவர். இந்த நிலையில் இவர் இன்று கோத்தகிரியில் இருந்து தனக்குச்சொந்தமான சொகுசு காரில் மேட்டுப்பாளையம் அடுத்துள்ள தென்திருப்பதி கோவிலுக்கு சாமி கும்பிட வந்துள்ளார்.சரியாக மேட்டுப்பாளையம் அன்னூர் சாலையில் வந்து கொண்டிருந்த போது தனியார்ஆசிரமம்அருகேசிறுநீர்கழிப்பதற்காகடிரைவரிடம் கூறி காரை நிறுத்திவிட்டு அருகில் இருந்த புதருக்கு சென்றுள்ளார். அப்போது,அங்கு ஏற்கனவே பதுங்கி இருந்த நான்கு பேர் கொண்ட கும்பல் சிவக்குமாரின் முகத்தை தவிர மற்ற அனைத்து உடல் பாகங்களிலும் அரிவாளால் சரமாரியாக வெட்டி விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.இச்சம்பவம் குறித்து அக்கம்பக்கத்தினர் சிறுமுகை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து சென்ற போலீசார் அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.அங்கு அவருக்கு முதலுதவிக்கு பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். இச்சம்பவம் குறித்து சிறுமுகை போலீசார் வழக்குப்பதிவு செய்து முன்விரோதம் காரணமாக இந்த அரிவாள் வெட்டு சம்பவம் நிகழ்ந்ததா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்பது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.இச்சம்பவத்தால் அங்கு ஒரு பதட்டமான சூழல் ஏற்பட்டுள்ளது.



# திருப்பத்தூர் புதிய பேருந்து நிலையத்தில் 16வது தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி!

## கலெக்டர் துவக்கி வைத்தார்!!

திருப்பத்தூர் ஜன.27

திருப்பத்தூர் மாவட்டம் 2026ஆம் ஆண்டு நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் முன்னிட்டு, 16வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு மாபெரும் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அதிகமாக மக்கள் கூடும் இடமான புதிய பேருந்து நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேலும் இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய வகையில், வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) செயல்முறை விளக்கத்திற்கான நடமாடும் செயல்முறை விளக்க வாகனம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

இந்த விழிப்புணர்வு வாகனத்தை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் க. சிவ சௌந்தரவல்லி அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். பின்பு பேருந்துகளில் வாக்காளர் விழிப்புணர்வு பொதுமக்களிடையே வாக்குப்பதிவின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில், திருப்பத்தூர் புதிய பேருந்து நிலையத்தில் இயக்கப்படும் பேருந்துகளில் வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன. இதன் மூலம் வாக்காளர்களின் உரிமை, ஜனநாயகத்தில் வாக்கின் முக்கியத்துவம், தவறாமல் வாக்களிக்க வேண்டிய அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வாக்காளர் கையெழுத்து நிகழ்வு அதனைத் தொடர்ந்து, தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு பேனரில் மாவட்ட ஆட்சித் தலைவர் க. சிவ சௌந்தரவல்லி அவர்கள் கையெழுத்திட்டு, வாக்காளர் விழிப்புணர்வு இயக்கத்திற்கு அதிகாரப் பூர்வ தொடக்கத்தை வழங்கினார்.

பின்னர் நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து அரசு அலுவலர்கள், அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்கள் வாக்காளர் அந்த பேனரில் கையெழுத்திட்டனர்.

நிகழ்ச்சியில் பங்கேற்ப்பில் திருப்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் – வரதராஜன் தேர்தல் தனி வட்டாட்சியர். திருமலை திருப்பத்தூர் வட்டாட்சியர் . நவநீதம் திருப்பத்தூர் நகராட்சி ஆணையர் – சாந்தி தேர்தல் துறை அலுவலர்கள், அரசு பணியாளர்கள், பொதுமக்கள் என ஏராளமோ கலந்து கொண்டனர்.




# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தின் 25 வது மாநில பொதுக்குழு கூட்டம்!

ஈரோடு, ஜன.27

ஈரோடுமாவட்டம்பிளாட்டினம்மஹாலில்தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தின் 25 வது மாநில பொது குழு கூட்டம் நடைபெற்றுகொண்டுள்ளது.மாநிலபொதுக்குழுவிற்கு மாநில மேலாண்மை குழு தலைவர் ஷம்சுல்லுஹா

ரஹமானி தலைமை தாங்கினார் மாநில தலைவர் அப்துல் கரீம் மாநில பொதுச் செயலாளர் முஜீபர் ரஹ்மான் மாநில தணிக்கை குழு தலைவர் சுலைமான் உள்ளிட்ட மாநில உயர்நிலை குழு உறுப்பினர்கள் மாவட்ட கிளைநிர்வாகிகள்மாவட்ட பேச்சாளர்கள்என பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.மேலும் பொதுக்குழுவில் இன்றைய அரசியல் சூழல், வரவிருக்கும் 2026 சட்டமன்ற தேர்தல் சிறுபான்மையினரின் நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக தமிழகத்தில் இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீட்டை உயர்த்துவது குறித்தும் ,ஆளும் பாஜக அரசின் சிறுபான்மை விரோத போக்கை கண்டித்தும், இந்தியாவில் சிறுபான்மைகளுக்கு எதிராக நடக்கும் வன்முறைகள் குறித்தும்,தமிழகத்தில் அதிகரித்துள்ள போதை பொருள் நடமாட்டம் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் வருகின்ற 2026 முதல் ஜனவரி 2027 வரையான 10 மாத காலங்கள் "அண்ணல் நபியின் அழகிய முன்மாதிரி" எனும் தலைப்பில் பல்வேறு வடிவங்களில் இஸ்லாமிய மக்கள் மத்தியில் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தனர். தொடர்ந்து பொதுக்குழுவில் மாநில பொருளாளர் இப்ராஹீம், மாநில துணைத்தலைவர் தாவூத் கைசர், மாநில துணை பொதுச்செயலாளர் அப்துல் ரஹீம் உள்ளிட்டோர்முன்னிலைவகித்தனர்.மாநிலசெயலாளர் சித்திக் இறுதியாக நன்றியுரையாற்றினர்.



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 16வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, தருமபுரி நகர பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக தேசிய வாக்காளர் தின மாபெரும் கையெழுத்து இயக்கத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், கையொப்பமிட்டு துவக்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, தருமபுரி நகர மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, நகராட்சி ஆணையர் சேகர், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் சி.க.ஜெயதேவ்ராஜ் தேர்தல் வட்டாட்சியர் அன்பு உள்ளிட்ட தொடர்புடை அலுவலர்கள் உள்ளனர்.



## தேசிய சாலை பாதுகாப்பு வார விழா:

# சேலம் மாநகர காவல் துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு!

சேலம், ஜன.27

தேசிய சாலை பாதுகாப்பு வார விழா வினைமுன்னிட்டு, சேலம் மாநகரகாவல் துறை சார்பில், கடந்த ஒரு வாரமாக மாநகரத்தின் பல்வேறு பகுதிகளில், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்தநிகழ்ச்சியில்தலைக் கவசம் அணிவது குறித்த பல்வேறு விழிப்புணர்வுகளை காவல்துறையினர் எடுத்துரைத்தனர். நிகழ்ச்சியின் இறுதி நாளான நேற்று, சேலம் அம்மாபேட்டை ஹோலி கிராஸ் பள்ளியிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண் மற்றும் பெண் வாகன ஓட்டிகள், தலைக்கவசம் அணிந்து அம்மாபேட்டை, மறவனேரி, அஸ்தம்பட்டி, 5 ரோடு, புதிய பேருந்து நிலையம், ஆட்சியர் அலுவலகம், குகை, உள்ளிட்ட பகுதிகளின் வழியாக, மாநகர காவல் ஆணையர் அலுவலக மைதானத்தை வந்தடைந்தனர். பின்னர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும், மாநகர காவல் ஆணையர் திரு. அணில் குமார் கிரி ஐபிஎஸ் அவர்கள், அனைவரையும் பாராட்டி பாராட்டு சான்றிதழ் வழங்கினார். பின்னர் விழிப்புணர்வு குறித்து பேசிய காவல் ஆணையர், இருசக்கர வாகனம் இயக்கம் அனைவரும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும், தலைக்கவசம் என்பது நமது உயிர் கவசம் என்றும், தலைக்கவசம் அணிவதால் நம் உயிர்மட்டுமேஇன்றி,நம்குடும்பத்தாரின் உயிரையும் காப்பாற்றலாம் என தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் சேலம் மாநகர காவல் துறை உயர் அதிகாரிகள், காவலர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## மொழிப்போர் தியாகிகள் நினைவு நாள்:

# திருப்பத்தூரில் அ.ம.மு.க. சார்பில் வீரவணக்கம்!



திருப்பத்தூர் ஜன.27

திருப்பத்தூர் பேருந்து நிலையம் எம்.ஜி.ஆர் சிலை அருகில் ஜனவரி 25ஆம் தேதி அனுசரிக்கப்படும் மொழிப்போர் தியாகிகள் நினைவு நாளை முன்னிட்டு, அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் – திருப்பத்தூர் மாவட்டம் சார்பில், திருப்பத்தூர் பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் சிலை அருகில், மொழிப்போர் தியாகிகளுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில், மொழி உரிமைகளுக்காக உயிர் தியாகம் செய்த மொழிப்போர் தியாகிகளை நினைவு கூரும் வகையில் பேனர்கள் வைக்கப்பட்டு, மாவட்ட செயலாளர் ஞானசேகரன் அவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தினார். மேலும், இந்த நினைவு நாள் நிகழ்ச்சி மாவட்ட மாணவரணி மற்றும் வழக்கறிஞர் பிரிவு சார்பிலும் சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் கழகத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் பெருமளவில் கலந்து கொண்டு, மெழுகுவர்த்தி ஏற்றி மொழிப்போர் தியாகிகளின் தியாகத்தை நினைவு கூர்ந்து மரியாதை செலுத்தினர். மொழியின் மரியாதை, இனத்தின் அடையாளம் மற்றும் தமிழின் உரிமைக்காக போராடி உயிர் நீத்த மொழிப்போர் தியாகிகளின் தியாகம் என்றும் தமிழர்களின் மனங்களில் நிலைத்திருக்கும் என நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.



# புதுக்கோட்டை அருகே வருவாய்த்துறை சார்பில் 16வது தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு ஊர்வலம்!

புதுக்கோட்டை, ஜன.27

182ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி 16வது தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வை முன்னிட்டு வரு வாய்த் துறை சார்பில் வாக்காளர் உறுதிமொழி மற்றும் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று நடைபெற்றது.

ஊர்வலத்திற்கு புதுக்கோட்டை மாவட்ட வளங்கள் (ம) நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் பார்த்தசாரதி தலைமை தாங்கி தாலுகா வளாகத்தில் இருந்து உறுதிமொழி எடுத்துக்கொண்டு கொடியசைத்து தொடங் கி வைத்தார்.

ஊர்வலத்தில் ஆலங்குடி தாசில்தார் வில்லியம் மோசஸ், தேர்தல் துணை அலுவலர் சுசிலா, ஆலங் குடி போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவசுப்பிரமணியன், ஆலங்குடி மண்டல துணை வட்டாட்சியர் சிவாஜிராஜன், வருவாய் ஆய்வாளர் தியாகராஜன் ஆலங்கு டி அரசு பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் செஞ்சிலுவை சங்கம். பள்ளி பேராசிரியர்கள், கல் லூரி முதல்வர்கள் ஆகியோர் முன்னிலையில் ஊர்வலம் நடந்தது. ஆலங்குடி பஸ் ஸ்டாண்ட், பழைய நீதிமன்ற வளா கம் அரச மரம் பஸ் ஸ்டாப், வடகாடு முக்கம், கலை ஞர் சாலை , கடைவீ தி, காய்கறி மார்க்கெட் பள்ளி வாசல் வழியாக 18 வயது பூர்த்தியடைந்த பள்ளி, மாணவர்கள், அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்வோம், காத்திடுவோம் காத்திடுவோம் ஜனநாயகத்தை கா த்திடுவோம் பதிவு செய்வோம் பதிவு செய்வோம் வாக்காளராக பதிவு செய்வோம், வாக்காளர் என் பதில் பெருமிதம் கொள்வோம் என்ற பதாதைகளை ஏந்தியபடி பொதுமக்களுக்கு துண்டு பிரசுரm ரங்களை தாசில்தார் வழங்கி தாலுகா அலுவலகத் தை சென்று அடைந்தது .

பின்னர் பார்த்தசாரதி தலைமையில் மாணவ மா ணவிகளுக்கு தேசிய வாக்காளர் தினத்தில் முறை யே கட்டுரை, கவிதை, பேச்சு, ஓவியம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற தேசிய மாணவர் படையின ருக்கு செஞ்சிலுவை சங்கமாணவர்களுக்கும் வா க்காளர் தின நற்சான்றிதழ், பரிசு பொருட்கள் வழ ங்கி வாக்காளர் தினத்தை கடைபிடித்தனர்.

ஆலங்குடி வருவாய் ஆய்வாளர்கள் தியாகராஜன், துரைக்கண்ணு, ஆலங்குடி கிராமநிர்வாகஅலுவலர்ராஜபாண்டி, மற்றும்வீஏஓ க்கள் மற்றும் உதவி யாளர்கள் வருவாய்த்துறை சார்பில் மாணவர்களுக்கு பிஸ்கட், பால் வழங்கப்பட்டது.

ஊர்வலத்தில் ஆலங்குடி போலீசார் பாதுகாப்பு மற் றும் அலுவலகப் பணியாளர்கள் மாணவ மாணவி கள், ஆசிரியர்கள் மாணவிகள் கல்லூரி பேராசிரி யர்கள் சமூக ஆர்வலர்கள் கல்வியாளர்கள் பொது மக்கள் மற்றும் பலர் கல ந்து கொண்டனர்.



வாணியம்பாடி அடுத்த மதனாஞ்சேரி கிராமத்தில் ஆலங்காயம் மேற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் தளபதி அறிவாலயம் 11 ஆம் ஆண்டு துவக்கவிழாவை முன்னிட்டு கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு பொற்கிழி ரொக்கம் மற்றும் வெள்ளிப்பதக்கம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வி.எஸ். ஞானவேலன் தலைமை வகித்தார்.



திண்டுக்கல்லில் புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி மாநிலக்குழு கூட்டம் வாழ்கவளமுடன் மீட்டிங் ஹாலில் நடைப்பெற்றது.இந்த கூட்டத்திற்க்கு திண்டுக்கல் மாவட்ட செயலாளர் இரா.தங்கபெருமாள் தலைமையில் நடைப்பெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு மாநிலசெயலாளர் ஆ.ஜீவானந்தம் மாநில பொதுசெயலாளர் சேக்கிழார் மாநிலசெயற்க்குழு உறுப்பினர் சம்பந்தம் புதுவை மாநில அமைப்பாளர் பார்த்தசாரதி,தமிழ்நாடு மாநிலசெயலாளர் வெங்கடேசன் மற்றும் மாநிலக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# பொங்கல் பண்டிகைக்கு ரூ.3 ஆயிரம் வழங்கி டாஸ்மாக் மூலம் ரூ.850 கோடியை திரும்ப பெற்றுக் கொண்டனர்!

## சவுமியா அன்புமணி குற்றச்சாட்டு!!

போச்சம்பள்ளி, ஜன. 27

மாங்காய்க்கு என ஒரு அமைப்பை நிறுவி, விலை நிர்ணயம் செய்ய வேண் டும் என போச்சம் பள்ளி யில் நடந்த கூட்டத் தில் பசுமை தாயகம் தலை வர் சவுமியா அன்புமணி பேசி னார்.



கிருஷ்ணகிரி மாவட் டம், போச்சம்பள்ளியில் பாமக சார்பில், தமிழக மக ளிர் உரிமை மீட்பு பயணம் கூட்டம் நடைபெற்றது. இதில் பசுமை தாயகம் தலைவர் சவுமியா அன்பு மணி கலந்து கொண்டுபே சியதாவது: மாங்காய்க்கு விலை நிர்ணயம் செய்ய ஒரு அமைப்பு நிறுவ வேண்டும். மா விவசாயத் தில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க தொழிற்சாலை இல்லை ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம், அனைத்து கிரா மத்திலும் இல்லை என பேசிய சவுமியா அன்பு மணி பேச்சு மங்களுக்கும் முழுமையாக விலை கி டை ப் ப தி ல் லை . தொழில் பேட்டை அமைப்பதற்காக நிலம் கொடுக்கும் மக்களுக்கு, அதே தொழிற்சாலையில் வேலை வழங்க வேண் டும். தமிழக அரசு பொங் கல் பண்டிகைக்காக ரூ.3 ஆயிரம் கொடுத்த நிலை யில் 850 கோடி ரூபாயை டாஸ்மாக் மூலமாக பெற் றுக் கொண்டனர்.

நாம் பெங்களூருவுக்கு தான் செல்லவேண்டும். கிராமங்களில் 108 ஆம்பு லன்ஸ் திட்டத்தை கொண்டு வந்தது அன்பு மணி தான். சத்தியம் வாங்கி கொண்டு ஓட்டு போட வைக்கிறார்கள். வரும் தேர்தலில் அன்பும ணிக்கு தான் உங்கள் வாக் குகளை அளிக்க வேண் டும். இவ்வாறு அவர் பேசினார். இந்த கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பழனிவேல், மாவட்ட தலைவர் அறுமு கம்: ஒருங்கிணைந்த மாவட்ட அமைப்பாளர் அண்ணா மலை, மாணவர் சங்க மாநில துணை செய லாளர் விஜயராஜ், பசுமை தாயக மாநில துணை செய லாளர் மாது, பில்லா, கும ரேசன், பசுமைத்தாயிரம் மாவட்ட செயலாளர் ஏ. ஜி. மணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# ஜோலார்பேட்டை தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

திருப்பத்தூர் ஜன.27

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார் பேட்டை: தமிழ் மொழியின் உரிமை, அடையாளம் மற்றும் எதிர்காலத்தை காக்க தங்களின் உயிரையே தியாகம் செய்த மொழிப்போர் தியாகிகளின் வீரவ ணக்க நாளை முன்னிட்டு, திருப்பத்தூர் மாவட்ட திமுக மாணவரணி சார்பில் ஜோலார்பேட்டை மஞ்சுநாதா தியேட் டர் அருகே மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டம் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பேச்சா ளர்கள், டி கே எஸ் இளங்கோவன் செய்தி தொடர்பு"குழு தலைவர்2000 ஆண்டுக ளுக்கு முன்னரே உலகின் பல மொழிக ளில் இலக்கியங்கள் இருந்தாலும், பெண் களுக்கும் சமத்துவம் வழங்கிய மொழியாக தமிழ் மொழியே திகழ்கிறது. சங்க இலக்கிய காலத்தில் மட்டும் 59 பெண்பால் புலவர்கள் தமிழ் இலக்கியங் களை படைத்துள்ளனர்.

மேலும், தமிழ் மொழிக்கு ஏற்பட்ட அடக்குமுறைகளுக்கும், அதன் வளர்ச்சி யைத் தடுக்கும் முயற்சிகளுக்கும் எதிராக நடைபெற்ற மொழிப்போர் போராட்டங் களின் வரலாறும் விரிவாக எடுத்துரைக் கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜோலார்பேட்டை சட்ட மன்ற உறுப்பினர் தேவராஜ், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி, ஆம் பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றி, மொழிப் போர்தியாகிகளுக்கு மலர்தூவி வீரவணக் கம் செலுத்தினர்.

மேலும் மாவட்ட திமுக மாணவரணி துணை அமைப்பாளர்கள் டி.சி. கார்த்தி, கே. சுபாஷ், எஸ். பிரபாகரன், ஜெ. அம் சவேணி, ஜெயக்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.



சேலம் அஸ்தம்பட்டி மத்திய சிறைச்சாலை வளாகத்தில், சேலம் மத்திய சிறை கண்காணிப்பாளர் வினோத் தேசிய கொடியை தனது திருக்கரங்களால் இயற்றி வைத்தார். இதனையடுத்து சிறைக் கண்காணிப்பாளர் வினோத், சேலம் மத்திய சிறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் தலைமையில், சிறப்பு காவல் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. விழாவில், சேலம் மத்திய சிறை ஜெயிலர் ராஜேந்திரன், துணை ஜெயிலர்கள் பிரபாகரன், சிவா மற்றும் முதல் தலைமை காவலர்கள் ராஜமாணிக்கம், வடிவேல் முருகையா உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சிறைத்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள், பணியாளர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஈரோட்டில் நடைபெற்ற தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் 25வது மாநில பொதுக்குழு கூட்டம்!

ஈரோடு,ஜன.27

ஈரோட்டில் நடைபெற்ற தமிழ்நாடு தவ் ஹீத் ஜமாஅத்தின் 25வது மாநில பொதுக் குழு கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய் தியாளர்களைச் சந்தித்த மாநில பொதுச் செயலாளர் முஜிப் ரஹ்மான், தமிழகத் தின் தற்போதைய அரசியல் சூழல் குறித் துப் பல்வேறு அதிரடி கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். வரும் சட்டமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியின் கூட் டணி என்பது ஒரு சந்தர்ப்பவாதக் கூட்ட ணியாகவே அமையும் என்றும், இதற்குத் தமிழக மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் தெரிவித் தார். தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி மக் கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்த விடாமல் முட்டுக்கட்டை போட்டு வரு வதாகவும், சட்டமன்றக் கூட்டத்தொட ரில் அவர் வெளிநடப்பு செய்தது மக்கள் நலனுக்கு எதிராக அவர் செயல்படுவ தையே காட்டுவதாகவும் முஜிப் ரஹ் மான் விமர்சித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், தமிழக வெற் றிக் கழகம் (த.வெ.க) போன்ற புதிய கட் சிகள் குறித்துக் கருத்து தெரிவிக்கையில், விஜய் தற்போதுதான் முதல் முறையாகத் தேர்தலைச் சந்திக்க உள்ளார் என்றும், அவர் இன்னும் முழுமையான அரசியல் நிலைப்பாடுகளையும் கொள்கை விளக் கங்களையும் அறிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.இருப்பினும், த.வெ.க போன்ற கட்சிகள் வாக்குகளைப் பிரிப் பது என்பது இறுதியில் அதிமுக போன்ற கட்சிகள் ஆட்சிக்கு வரவோ அல்லது பாசிச சக்திகள் கால் பதிக்கவோ வழிவ குக்கும் என எச்சரித்தார். வாக்குகளைப் பிரிக்கும் கட்சிகளுக்கு மக்கள் வாக்களிக் கக் கூடாது என்றும், அவ்வாறு வாக்களிப் பது ஒரு நல்லாட்சி அமைவதற்குத் தடை யாக அமையும் என்றும் அவர் வலியுறுத்தினார். விஜய் பாஜகவின் ஏஜெண்டாகச் செயல்படுகிறார் என்பதற் குப் போதிய ஆதாரங்கள் இல்லை என்றா லும், அவருக்குப் போடப்படும் வாக்கு கள் மறைமுகமாகப் பாசிச கட்சிகள் ஆட்சி அமைக்கவே சாதகமான சூழலை உருவாக்கும் என்றார்.



மேலும், வரும் சட்டமன்றத் தேர்தலில் அனைத்துக் கட்சிகளும் இஸ்லாமிய மக் களின் விகிதாசார அடிப்படையில் வேட் பாளர்களை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த அவர், இஸ் லாமியர்களின் நலன் காக்கும் திட்டங்களை எந்தக் கட்சி முன்வைக்கிறதோ, அந்தக் கட்சிக்கே தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தனது ஆத ரவை வழங்கும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

## தாராபுரம் அருகே

# வாகனம் கவிழ்ந்து ஒருவர் பலி!

## மூன்று பேர் படுகாயம்!!



கோவை,ஜன.27

கோவை மாவட்டம் சிங்காநல்லூர் பகுதியை சேர்ந்த வர் வெங்கடேசன்.இவர் கட்டிட கட்டுமான பணி செய்து வருகிறார். இந்நிலையில் வெங்கடேசன் கோவையிலிருந்து தனது நான்கு சக்கர கனரக வாகனத் தின் மூலம் கட்டிடப் பணிகளுக்கான சென்ட்ரிங் பலகை கள் மற்றும் கட்டிட பொருட்களை எடுத்துக்கொண்டு தனது பணியாளர்களான சென்றாயன்,பிரபு,விக்னேஷ் வர் உள்ளிட்ட பணியாளர்களுடன் மதுரை செல்வதற் காக திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தேசிய நெடுஞ் சாலை வழியாக சென்று கொண்டு இருந்த பொழுது கட்டிட பொருட்களை எடுத்து கொண்டு சென்ற கனரக வாகனம் ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்து சாலை யில் தலை குப்புற கவிழ்ந்தது இதில் கனரக வாகனத்தின் மீது பயணித்த இருவரில் ஒருவர் சாலையில் தூக்கி வீசப் பட்டதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் மற்ற ஒருவரும் வாகனத்தின் உள்ளே அமர்ந்து இருந்த மூவரும் படுகாயம் அடைந்தனர்.

விபத்து குறித்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தாராபுரம் காவல்துறையினர் உயிரிழந்தவரின் உடலை மீட்டு தாராபுரம் அரசு மருத்துவ மனைக்கு உடற் கூர் ஆய்வுக்கு அனுப்பி வைத்தனர் மேலும் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அவசர ஊர்தி மூலம் சிகிச்சைக் காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் விபத்து குறித்து தாராபுரம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வரு கின்றனர். தேசிய நெடுஞ்சாலையில் கட்டிட பொருட் களை ஏற்றி வந்த கனரக வாகனம் தலைக்குப்புற விழுந்து ஒருவர் பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் பரப ரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஈரோடு சித்தோட்டில்

# கோவம்ச பண்டாரத்தார் சங்க மாநில மாநாடு!



ஈரோடு,ஜன.27

ஈரோடு மாவட்டம் சித்தோடு பகுதியில் உள்ள தனி யார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு கோவம்ச பண் டாரத்தார் முன்னேற்ற நலச்சங்கத்தின் பிரம்மாண்ட மாநில மாநாடு நடைபெற்றது. சங்கத்தின் மாநிலத் தலைவர் கலையரசன் தலைமையில் நடைபெற்ற இந்த எழுச்சி மாநாட்டில், மாநிலம் முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் சமுதாய முன்னேற்றம் மற்றும் உரி மைகளை வலியுறுத்தி பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.குறிப்பாக, திருக் கோவில்களில் பல தலைமுறைகளாகப் பணியாற்றி வரும் பரம்பரை பூசாரிகளை, அந்தந்தக் கோவில் அறங் காவலர் குழுவில் உறுப்பினர்களாக நியமிக்க அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மேலும், முன்னோர்களால் கோவில்களுக்கு வழங்கப் பட்ட நிலங்களை அந்தந்தப் பூசாரிகளின் பெயருக்குப் பட்டா மாற்றம் செய்து அரசாணை வெளியிட வேண் டும் என்றும், பரம்பரை பூசாரிகளை அப்புறப்படுத்தி விட்டு புதியவர்களை நியமிக்கும் போக்கைக் கைவிட்டு சமூகத்தின் பூஜை உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து, 'உண்டியல்' என்ற சொல்லிற்குப் பதிலாக 'பண்டாரம்' என்ற தூய தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும் எனவும், ஊடகங்கள் மற்றும் திரைப்படங்களில் தங்களை இழிவுபடுத்தும் வகையில் 'பண்டார பரதேசி' போன்ற சொற்களைப் பயன்படுத்து வதற்குத் தடை விதிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு வாழ்வாதாரக் கோரிக்கைகள் தமிழக அரசுக்கு இந்த மாநாட்டின் வாயிலாக முன்வைக்கப்பட்டன.



கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அடுத்த அச்சமங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட கொல்லப்பட்டி கிராமத்தில் பாராளுமன்ற ராஜ்ய சபா உறுப்பினர் கழக கொள்கை பரப்பு செயலாளர் தம்பிதுரை புதிய பல்நோக்கு கட்டிடம் பூமி பூஜை போடப்பட்டது. விழாவில் பர்கூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திரன் ஒன்றிய கழக செயலாளர் ஜெயபால் வெற்றி செந்தில் உள்பட கழக நிர்வாகிகள் ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

## வாணியம்பாடி தனியார் மருத்துவமனையில்

# துண்டிக்கப்பட்ட கையை மருத்துவ குழுவினர் முழுமையாக சரி செய்து சாதனை படைத்தனர்!



வாணியம்பாடி, ஜன.27

திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனா முத்தூர்அடுத்தஅத்திப்பட்டுகிராமத்தைச் சேர்ந்தவர் நவீன்(18). இவர் கடந்த 15 ஆம் தேதி பொங்கல் பண்டிகை அன்று விபத்தில் சிக்கி கைதுண்டாகி ஆபத்தான நிலையில் போளூர் அரசு மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டு பின்னர் மேல் சிகிச் சைக்காக வேலூர் அரசு மருத்துவம னைக்கு அனுப்பப்பட்ட நிலையில் அவரை வாணியம்பாடியில் உள்ள தனி யார் டேவிட் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத் துவமனை)மருத்துவமனையில் சிகிச் சைக்காக சேர்க்கப்பட்டார்.

விபத்தில் அவரது வலது கை( Dominant hand) கிட்டத்தட்ட துண்டிக்கப்பட்ட இருந்தது. இதன் காரணமாக கையில் 18 தசைநார்கள் (Tendons), 2 முக்கிய அர்டரி கள் (Arteries)மற்றும் வெயின்ஸ்( veins), 3 நரம்புகள் (Nerves) முழுமையாக துண்டிக் கப்பட்டிருந்தது. மேலும், கை பகுதியில் இரத்த ஓட்டம் முற்றிலும் தடைபட்டு இருந்தது. 8–10 மணி நேரம் crtical limb ischemia நேரத்தை கடக்கும் தருவாயில்

வாணியம்பாடி டேவிட் மல்டிஸ்பெ ஷாலிட்டி மருத்துவமனையின் எலும்பி யல்மற்றும்மைக்ரோவாஸ்குலர்அறுவை சிகிச்சை குழு அவசர அறுவை சிகிச்சையைத் தொடங்கி சுமார் 8 மணி நேரம் நீடித்த அறுவை சிகிச்சையில் எலும்புகள், தசைநார்கள், அர்டரிகள், நரம்புகள் மற்றும் சிறைகள் ஒன்றன் பின் ஒன்றாக மிக நுணுக்கமாகச் சரி செய்யப் பட்டது. இறுதியில், கைக்கு மீண்டும் இரத்த ஓட்டம் திரும்பியது.

இது குறித்து எலும்பியல் மருத்துவர் டேவிட் விமல் குமார் கூறியதாவது:

இந்த அறுவை சிகிச்சை வெற்றியால், அந்த இளைஞரின் எதிர்கால வாழ்க்கை யும் தொழில் வாய்ப்புகளும் மீண்டும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இது ஒரு சாதா ரண அறுவை சிகிச்சை அல்ல, ஒரு இளை ஞரின் முழு வாழ்க்கையை காப்பாற்றிய தருணம் என்றார்.

மேலும் டேவிட் மல்டிஸ்பெஷாலிட்டி மருத்துவமனை நிர்வாகமும், அறுவை சிகிச்சை, மயக்கவியல், அவசர பிரிவு, ஐசியு மற்றும் செவிலியர் குழுவினரும் இந்த வெற்றியில் முக்கிய பங்காற்றியுள் ளனர்.

இந்த கை மீண்டும் உயிர் பெற்றது – அது ஒரு மருத்துவ வெற்றி மட்டுமல்ல, மனிதநேயத்தின் வெற்றி" என அவர் கூறி னார். கடந்த 2024 ஆகஸ்ட் 20 ஆம் தேதி

ஒடிசா மாநிலத்தை சேர்ந்த ராஜ்குமார் என்பவர் வாணியம்பாடி அருகே உள்ள தனியார் ஜல்லி மிஷினில் கை துண்டாகி இதே மருத்துவமனை அறுவை சிகிச்சை மூலமாக சரி செய்து சாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



கோவை மாவட்டம் செட்டிபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட அண்ணா நகர் பகுதியில் சமுதாய நல்லினக்க பொங்கல் விழா, ராணா சங்கர் தலைமையில் மிக விமர்சையாக நடைபெற்றது.இந்நிகழ்வில் பெண்களுக்கான கோல போட்டி சிறுவர் சிறுமி யருக்கான விளையாட்டு போட்டிகள் மற்றும் ஆண்கள் பெண்கள் உறியடிக்கும் போட்டி ஆண்கள்,பெண்கள்கபடி போட்டி,ஓட்டப்பந்தயம்,ஆகிய போட்டிகள் நடைபெற்றன,இந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.